சுற்றுநிருபம்-02/2014

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
35, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
21.07.2014

வடமாகாணத்தின் சகல
கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விதிகள் பதவி நியமனங்களுக்கான ஆவணங்களை சமர்ப்பித்தல்

2014.07.21 ந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் முறையில் பதவி நியமனங்களுக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான விதிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு அமைய வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
கீழே பிரிவு 20 இன் கீழ் குறிப்பிட்டவாறு நேர்முகப் பரீட்சைப் புள்ளி வழங்கல் முறையைக் கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்றுதல் வேண்டும்.இதற்கு முன்னர் நேர்முகப் பரீட்சைக் குழு நியமனம்,புள்ளியிடல் ஆகியன தொடர்பாக அனுப்பப்பட்ட 15/2009 இலக்க 30.09.2009ந் திகதிய சுற்றுநிருபம் இரத்தாக்கப்பட்டுள்ளது.

1. கூட்டுறவு நடைமுறை விதிக்கோவை பின் இணைப்பு VII இல் குறிப்பிட்டவாறான பூர்த்தி செய்யப்பட்ட படிவம்.
2. கூட்டுறவு ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட ஆளணிப்பிரதி.
3. விளம்பரம் செய்யப்பட்ட அல்லது விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் பிரதி.
4. அட்டவணைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள்.
5. தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள்.
6. பிறப்புச் சான்றிதழ் பிரதி.
7. கல்வித் தகைமைச் சான்றிதழ்.
8. சேவைத் தகைமைச் சான்றிதழ்.
   சேவை நிலையம்,சேவைக் காலம்,வகித்த பதவி, சம்பள அளவுத் திட்டம்.
9. அனுபவச் சான்றிதழ்.
10. நேர்முகப் பரீட்சை சபையினால் புள்ளிகளை வழங்குவதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறைகளும்,புள்ளிகளும்.(புள்ளி விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.)

10.1. அடிப்படைக் கல்வித்தகைமை/சேவைத்தகைமை.
   புள்ளியிடல் அனைவருக்கும் சமமானதாகும்.
10.2. மேலதிக கல்வித்தகைமை.
10.3. மேலதிக சேவைத்தகைமை.
10.4. தொழிற்கல்வித் தகைமை/அனுபவத்தகைமை.
10.5. வதிவிடத் தகைமை(உள்ளக ஆட்சேர்ப்பிற்கு அவசியமற்றது.)
10.6. செயற்பாட்டு மதிப்பீடு (உள்ளக ஆட்சேர்ப்பிற்கு மாத்திரம் கணித்தல்)
   நேரடி மேற்பார்வையாளரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10.7. நேர்முகம்.(ஆளுமை,ஒழுக்கம்,தொடர்பாடல் போன்றவை.)

11. நேர்முகப் பரீட்சை சபை உறுப்பினர் பெயரும் பதவியும்.
12. எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டிருந்தால் வினாப்பத்திரங்களின் பிரதிகளும் புள்ளிகள் வழங்கப்பட்ட ஒழுங்குமுறையும்.
13. விடைப் பத்திரங்களைப் பரிசோதித்தவர்களின் பெயர்களும், பதவியும், தகைமைகளும்.
14. சரிபார்த்த விடைப் பத்திரங்கள்.

15. இறுதிப்புள்ளி வழங்கப்பட்ட அட்டவணை.
16. நேர்முகப்பரீட்சை சபையின் விதப்புரை.
17. நியமனத்திற்கான முன்னங்கீகாரத்தைப் பெறுவதற்கான இயக்குனர்சபை தீர்மானம்.
18. கோவையின் உள்ளடக்கம்.
19. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் விதப்புரை.
20. தேசிய அடையாள அட்டை இலக்கம்,உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
21. நேர்முகப் பரீட்சை சபையினால் புள்ளி வழங்குவதற்குக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறைகளும், புள்ளிகளும்.

| விபரம் | வெளிவாரித்தெரிவு | உள்வாரித்தெரிவு |
|---|---|---|
| அடிப்படைக் கல்வித் தகைமை, சேவைத் தகைமை | 30 | 30 |
| மேலதிக கல்வித் தகைமை | 15 | 10 |
| மேலதிக சேவைத் தகைமை | 10 | 20 |
| தொழிற் கல்வித் தகைமை/அனுபவத்தகைமை | 10 | 05 |
| வதிவிடத் தகைமை | 10 | -- |
| செயற்பாடு மதிப்பீடு | -- | 10 |
| நேர்முகம் ( ஆளுமை, ஒழுக்கம், தொடர்பாடல்) | 25 | 25 |
| | 100 | 100 |

நியமன அங்கீகாரத்திற்காக இணைக்கப்படும் இவ் ஆவணங்கள் யாவும் தனித்தனியாக சங்கத் தலைவராலும், சங்கப் பொதுமுகாமையாளர்/செயலாளராலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சான்றிதழ் மூலப்பிரதியுடன் செவ்வை பார்த்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எந்த நியமனத்திற்கும் நேர்முகப் பரீட்சையின் சிபார்சின் பேரிலே சங்க நிர்வாகம் தீர்மானம் எடுத்தல் வேண்டும்.
ஒவ்வொரு பதவிக்குமான ஆவணங்கள் தனித்தனியாக ஒவ்வொரு கோவையிலும் இடப்படுதல் வேண்டும். இக் கோவையின் எல்லா பக்கமும் குறிப்பிடப்பட்டு உள்ளடக்கத்தில் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். இதனை பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாக ஒப்படைத்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத கோவைகள் பூரணப்படுத்தும் வரை எக் காரணம் கொண்டும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படமாட்டாது. இந் நியமனங்களின் அங்கீகாரத்திற்கான காலதாமதத்திற்கு சங்க முகாமையே பொறுப்பாளியாவார்கள்.

2014.07.21 ஆம் திகதிய ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

க.பிரபா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடமாகாணம்.

பிரதி:வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்.

Ms.K.PRABHA
Secretary
Co-operative Employees Commission
Northern Province